(ஆறாவது பாராளுமன்றம் - நான்காவது கூட்டத்தொடர்)

இல. 20.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

2009, ஓகத்து 18, செவ்வாய்க்கிழமை, மு. ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0003 / ' 09

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— மக்கள் தொடர்பாடல், தகவல் அமைச்சரும் தொழில் முயற்சி அபிவிருத்தி, முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— ( 2 )

(அ) (i) நாட்டில் தொழிற்பாட்டில் உள்ள தொலைக்காட்சி நிலையங்களின் எண்ணிக்கையையும்,

(ii) உரிமங்கள் வழங்கப்பட்டிருப்பினும் தொழிற்பாடு ஆரம்பிக்கப்படாதிருக்கும் தொலைக்காட்சி நிலையங்களுக்காக வழங்கப்பட்ட உரிமங்களின் எண்ணிக்கையையும்,

(iii) அவர்களது ஒளிபரப்பின் அலைவரிசையையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) உள்ளூர் திரைப்படக் கைத்தொழிலுக்கு உதவும் நோக்கத்துடன் வெளிநாட்டுத் தொலைக்காட்சித் திரைப்படங்கள் நாட்டிற்குள் கொண்டுவரப்படுவதை அதைரியப்படுத்துவதற்காக அரசாங்கம் வரிகளை அறிமுகம் செய்ததை அவர் அறிவாரா?

(இ) (i) அது தனது குறிக்கோளை அடைந்து விட்டதா என்பதையும்,

(ii) அவ்வாறெனின், எங்கே, எவ்வாறு இப்பயன்கள் அடையப்பெற்றன என்பதையும்,

(iii) வரிகள் விதிக்கப்பட்டது முதல் இற்றைவரை ஒவ்வொரு நிலையத்தினாலும் மாதாந்தம் செலுத்தப்பட்ட தொகையையும்

அவர் கூறுவாரா?

(ஈ) (i) இந்தத் தொலைக்காட்சி நிலையங்கள் மீது விதிக்கப்பட்ட ஏனைய வரிகளையும்,

(ii) கடந்த 12 மாதங்களில் அரசாங்கத்தினால் சம்பாதிக்கப்பட்ட தொகையை வெவ்வேறாகவும்

அவர் கூறுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

0083 / '09

2.

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2008 ஆம் ஆண்டில் புகையிரதக் கட்டணங்களை அதிகரித்தமையால் மொத்த வருமானம் 3.671 மில்லியன் ரூபா வரை 22.4 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா ?

(ஆ) எனினும் இலங்கை புகையிரத சேவையின் தொழிற்பாட்டு நட்டம் 4.553 மில்லியன் ரூபா வரை 5.9 சதவீதத்தால் 2008 ஆம் ஆண்டில் உயர்வடைந்துள்ளதென்பதை அவர் ஏற்றுக்கொள்கிறாரா ?

(இ) (i) புகையிரதக் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டமையினால் வருமானம் அதிகரித்துள்ளபோதிலும் இலங்கை புகையிரத சேவையின் நட்டம் அதிகரிக்க காரணங்கள் யாவையென்பதையும்,

(ii) விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரென்ற வகையில் இந்நிலைமயை மாற்றியமைக்க மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா ?

(ஈ) இன்றேல், ஏன் ?

0095 / ' 09

3.

கௌரவ ஆர்.பி.ஏ. ரணவீர பதிரண,— மக்கள் தொடர்பாடல், தகவல் அமைச்சரும் தொழில்முயற்சி அபிவிருத்தி, முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2005,2006,2007 மற்றும் 2008 ஆகிய ஆண்டுகளில் சுயாதீன தொலைக்காட்சி தேர்தலுக்கு முன் விளம்பரங்களை பிரசாரம் செய்தது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி தேர்தலுக்கு முன் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டதன் மூலம் மேற்படி நிறுவனம் ஒவ்வொரு அரசியல் கட்சியிடமிருந்தும், நிறுவனங்கள் மற்றும் ஆட்களிடமிருந்தும் ஈட்டியுள்ள தொகை எவ்வளவென்பதை அவர் இச்சபைக்குக் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி தேர்தலுக்கு முன் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டதன் விளைவாக அறவிடப்படவேண்டியுள்ள தொகை எவ்வளவென்பதையும்,

(ii) இது எந்த கட்சியிடமிருந்து, எந்த நிறுவனத்திடமிருந்து மற்றும் எந்த நபரினது பிரசார நடவடிக்கைகள் சார்பாக என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0186 / ' 09

4.

கௌரவ பேமசிறி மானகே,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனம் 2000 ஆம் ஆண்டில் இருந்து இற்றைவரை பெற்றுள்ள இலாபம் அல்லது நட்டம் எவ்வளவு,

(ii) நட்டமடைந்திருப்பின் அதற்கான காரணங்கள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(ஆ) மேற்படி நட்டத்தை இலாபமாக மாற்றும்பொருட்டு ஏற்கெனவே மேற்கொள்ளப் பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதை அவர் குறிப்பிடுவாரா ?

(இ) இன்றேல், ஏன் ?

0385 / '09

5.

கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல,— மின்வலு, சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) இலங்கை மின்சார சபை எதிர்கொண்டுள்ள கடுமையான நிதி நெருக்கடிக்கு தீர்வாக, "லங்கா டிரான்ஸ் போமர்ஸ் லிமிட்டெட்டில்" இலங்கை மின்சார சபைக்கு உரித்தான 63% பங்கினை விற்க அரசு தீர்மானித்துள்ளதா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அவ்வாறெனின் இந்த பங்குகளை விற்கும் போது பகிரங்க கேள்விப்பத்திரம் மூலம் பங்குகளை விற்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) இவ்வாறு தனியார் துறையினருக்கு பங்குகளை விற்பது "மகிந்த சிந்தனைக்கு" முரணானது அல்லவா எ ன்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0470 / '09

6.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நிதி , திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கைக்கு மதுசாரம் இறக்குமதி செய்வதற்கான உரிமப் பத்திரம் பெற்றுள்ளவர்களால் 2007 ,2008 ஆம் ஆண்டுகளிலும் 2009 ஆம் ஆண்டின் முதற் காலாண்டிலும் இறக்குமதி செய்யப்பட்ட மதுசாரத்தின் அளவு தனித்தனியாக எவ்வளவென்பதையும் ,

(ii) அவற்றின் பெறுமதி எவ்வளவென்பதையும் ,

(iii) ஒவ்வொரு நிறுவனத்தினாலும் அரசாங்கத்துக்கு செலுத்தப்பட்டுள்ள வரித் தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(ஆ) இன்றேல், ஏன் ?

0502 / '09

7.

கௌரவ சந்திம வீரக்கொடி,— வர்த்தகம், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி, கூட்டுறவுத்துறை, நுகர்வோர் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) வர்த்தகம், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி, கூட்டுறவுத்துறை, நுகர்வோர் சேவைகள் அமைச்சின் கீழ் வரையறுக்கப்பட்ட கல்வி ஊழியர்களின் சிக்கன மற்றும் கடன் கொடுக்கல் வாங்கல் கூட்டுறவு சங்கம் என்ற பெயரில் சங்கமொன்று உண்டென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இச்சங்கத்தின் நோக்கங்கள் யாவை,

(ii) தற்போதைய பணிப்பாளர் சபை நியமனமான திகதி யாது,

(iii) தற்போதைய பணிப்பாளர் சபை உறுப்பினர்களின் பதவி, பெயர், முகவரிகள் யாவை

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0067 / '09

8.

கௌரவ ரவி கருணாநாயக்க,— மக்கள் தொடர்பாடல், தகவல் அமைச்சரும் தொழில் முயற்சி அபிவிருத்தி, முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) தற்போதைய இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபன சட்டத்தின் கீழேயே அரச ஒலிபரப்பு முகவர்களுக்கும், தனியார் கம்பனிகளுக்கும் தற்பொது ஒலிபரப்பிற்கான உரிமம் வழங்கப்படுகின்றது என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனமும் தற்போதைய இலங்கைத் தொலைத்தொடர்பாடல் சட்டத்தின் கீழ் ஒழுங்குபடுத்தப்படும் ஒரு நிறுவனம் என்பதையும், எனவே ஒலிபரப்பு உரிமங்களை இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத் பாபனச் சட்டத்தின் கீழ் வழங்குவது, ஏனைய உரிமைக்காரர்களுக்கும் விண்ணப்பதாரிகளுக்கும் தீமையேற்படுத்தும் என்பதையும், இது நீதியான வர்த்தகம், சம சந்தர்ப்பம் என்ற வகையில் கைச்சாத்தான உலக வர்த்தக நிறுவனம் மற்றும் ஏனைய சர்வதேச ஒப்பந்தங்களுடன் முரண்படுகின்றது என்பதையும் அவர் அறிவாரா என்பதை குறிப்பிடுவாரா?

(இ) தொலைக்காட்சி ஒளிபரப்பு உரிமங்கள் வழங்கப்படும் தற்போதைய இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனச் சட்டத்தில் இவ்வேற்பாடுகளை சட்டவலுவற்ற தாக்குவதற்கும் தற்போதைய இலங்கைத் தொலைத்தொடர்புச் சட்டத்திலோ அல்லது அதையொத்த ஒன்றிலோ இவ் ஏற்பாடுகளை மீள அறிமுகம் செய்வதற்கும் அவர் நடவடிக்கை எடுப்பாரா என்பதையும் அவர் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0105 / '09

9.

கௌரவ ஆர்.பி.ஏ.ரணவீர பதிரண,— மக்கள் தொடர்பாடல், தகவல் அமைச்சரும் தொழில் முயற்சி அபிவிருத்தி, முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) தேசிய ரூபவாஹிணி 2005, 2006, 2007 மற்றும் 2008 ஆம் ஆண்டுகளில் தேர்தலுக்கு முந்திய பிரச்சார விளம்பரங்களை பிரச்சாரம் செய்ததென்பதை அவர் அறிவாரா ?

(ஆ) (i) இந்நிறுவனம் மேற்படி தேர்தலுக்கு முந்திய பிரச்சார நடவடிக்கைகள் மூலமாக ஒவ்வோர் அரசியல் கட்சி அல்லது நிறுவனம் மற்றும் ஆட்களிடமிருந்து வருடாந்தம் ஈட்டிய பணத்தொகை யாதென்பதையும்,

(ii) இவ்விதமாக தேர்தலுக்கு முந்திய பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபட்டதன் காரணமாக எவ்வளவு பணத்தொகை அறவிடப்பட வேண்டியுள்ள தென்பதையும்,

(iii) எக்கட்சியிடமிருந்து, நிறுவனத்திடமிருந்து, ஆளிடமிருந்து பிரச்சார நடவடிக்கைகளுக்காக இவ்விதமாக அறவிடப்பட வேண்டியுள்ள தென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா ?

(இ) இன்றேல், ஏன்?

0187 / ' 09

10.

கௌரவ பேமசிறி மானகே,— நீர்ப்பாசன, நீர் முகாமைத்துவ அமைச்சரும் துறைமுகங்கள், விமானச்சேவைகள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) "மிஹின் லங்கா" விமான சேவைக்காக 2008 மற்றும் 2009ஆம் ஆண்டுகளில் வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதி எவ்வளவு என்பதையும்,

(ii) அந்த விமான சேவைக்கு மேலதிகமாக அரசாங்கம் சம்பந்தப்பட்டுள்ள மற்றுமொரு விமான சேவை உள்ளதா என்பதையும்,

(iii) அவ்வாறெனின், அதன் பெயர் யாதென்பதையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) மிஹின் லங்கா விமான சேவைக்குச் சொந்தமான விமானங்களின் எண்ணிக்கை எத்தனை,

(ii) அந்த விமானங்களின் பதிவிலக்கங்கள் யாவை

என்பதை அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) கடந்த வருடத்தில் மிஹின் லங்கா விமான சேவைக்குக் கிடைத்த இலாபம் அல்லது நட்டம் எவ்வளவென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0268 / '09

11.

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) முச்சக்கர வண்டி ஓட்டுநர்களுக்கு பெற்றோல் எறிபொருளுக்கான மாணியமொன்றை பெற்றுக்கொடுப்பதற்கு அரசாங்கம் தீர்மானம் மேற்கொண்டுள்ளதென்பதையும்,

(ii) இதற்கான சுற்றுநிருபமொன்று வெளியிடப்பட்டுள்ளதென்பதையும்,

(iii) மேற்படி சுற்றுநிருபத்திற்கமைய மாணியத்தை பெற்றுக்கொள்வதற்கு முன்வந்தவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவானதாக இருந்த தென்பதையும்,

(iv) இதற்கான காரணம் மாணியத்தை கோருவதற்கு உள்ள சந்தர்ப்பத்தை குறைக்கும் வகையில் விண்ணப்பித்தில் முறைமை சிக்கல் படுத்தப் பட்டுள்ளமையாகும் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) இற்றைவரை கொழும்பு மாவட்டத்தில் பெற்றோல் மாணியத்திற்காக விண்ணபித்தவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) மாணியத்தை பெற்றுக்கொண்டவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0472 / '09

12.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2005 மஹிந்த சிந்தனையை அமுல்படுத்துதலின் கீழ் உருவாக்கப்பட்ட "மக நெகும" நிறுவனம் ஓர் கூட்டுத்தாபனமா, நியதிச்சட்ட சபையா, அல்லது திணைக்களமா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அதன் சட்டபூர்வத்தன்மை எவ்வாறானதென்பதையும்,

(ii) அதன் தலைவரின் பெயர் மற்றும் இவரின் தகைமைகள் யாவையென்பதையும்,

(iii) மேற்படி நிறுவனத்தில் பணியாற்றும் அமைய மற்றும் நிரந்தர ஊழியர்களின் பெயர்கள் மற்றும் பதவிகள் யாவையென்பதையும்,

(iv) மேற்படி நிறுவனத்திற்கு சொந்தமான வாகனங்கள் மற்றும் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(இ) மேற்படி நிறுவனத்தின் தலைவர் மற்றும் ஏனைய பணியாட் தொகுதியினரின் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் வெவ்வேறாக யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0503 / '09

13.

கௌரவ சந்திம வீரக்கொடி,— வர்த்தகம், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி, கூட்டுறவுத்துறை, நுகர்வோர் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) வரையறுக்கப்பட்ட கல்வி ஊழியர்களின் சிக்கன மற்றும் கடன் கொடுக்கல் வாங்கல் கூட்டுறவு சங்கத்தின் தற்போதைய தலைவர் அரசியல் கட்சியொன்றின் மத்திய சபையின் செயற்குழு உறுப்பினர் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) ஆமெனில், அவ்வரசியல் கட்சி யாதென்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) மேற்குறிப்பிட்ட தலைவர் கடந்த சப்ரகமுவ மாகாணசபை தேர்தலின்போது வேட்பாளராகத் தோற்றியிருந்தார் என்பதை அவர் ஏற்றுக் கொள்வாரா?

(ஈ) ஆமெனில், பெற்ற வாக்குகள் எத்தனை என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

14.

கௌரவ பேமசிறி மானகே,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) இந்திய மீனவர்கள் எமது நாட்டுக்குச் சொந்தமான கடற் பரப்பில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுகின்றார்களென்பதை அவர் அறிவாரா ?

(ஆ) எமது நாட்டுக் கடற் பரப்பில் மீன் பிடிப்பதற்கு இந்திய மீனவர்களுக்கு உரிமை இல்லையென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா ?

(இ) (i) மேற்படி மீன்பிடித்தலை நிறுத்துவதற்கு நடவடிக்கையெடுப்பாரா என்பதையும் ,

(ii) ஆமெனில், அது எவ்வாறென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா ?

(ஈ) இன்றேல், ஏன் ?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு ,— 7 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2009.05.26 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல் இன்றைய தினம் சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 12.30 மணிவரையும், பி. ப. 1.00 மணி முதல் பி.ப. 6.00 மணி வரையும் இருக்குமாக. பி. ப. 6.00 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

1.

புண்ணிய ஒழுங்கமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

2.

இலங்கை சிறுகைத்தொழிற்சபை (கூட்டிணைத்தல்) (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

3.

விலங்குகளுக்குக் கொடுமையிழைத்தலைத் தடுப்பதற்கான இலங்கைச் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் - பரிசீலனை.

4.

இலங்கை கடல்கடந்த முஸ்லிம் கல்விசார் நம்பிக்கைப் பொறுப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் - பரிசீலனை.

5.

லஸந்த அலகியவன்ன மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

6.

அல்ஹாஜ் அப்துல் ஜவாத் ஆலிம் வலிய்யுல்லாஹ் நம்பிக்கைப் பொறுப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

7.

கொட்டாவ ஸ்ரீ புண்ணியாபிவர்தன விஹாரஸ்தான செயற்பாட்டுச் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

*8.

பாராளுமன்ற தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*9.

மின்வலு, சக்தி அமைச்சர்,— குறைநிரப்பும் தொகை — தலைப்பு 119, நிகழ்ச்சித்திட்டம் 02 ,— † 2009 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆம் திகதி தொடங்கி 2009 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி முடிவடையும் நிதியாண்டின் சேவைக்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியத்தினின்றும் அல்லது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்தினதும் அல்லது இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கம் பயன்படுத்தக்கூடிய வேறெந்த நிதியிலிருந்தும் அல்லது பணத்திலிருந்தும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கம் பெற்றிருக்கும் எந்தக் கடன் நிதியத்திலிருந்தும் இரண்டாயிரத்து நாநூறு மில்லியன் (ரூபா 2,400,000,000) ரூபாவிற்கு மேற்படாத குறைநிரப்பும் தொகையொன்று வழங்கப்படல் வேண்டும். அத்தொகை பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப் பட்டுள்ளவாறு செலவு செய்யப்படலாம்:-

அட்டவணை

| | | | |
|---|---|---|---|
| தலைப்பு: 119 | — | மின்வலு, சக்தி அமைச்சு | |
| நிகழ்ச்சித்திட்டம் : 02 | — | அபிவிருத்திச் செயற்பாடுகள் | |
| | — | ஆக்கப்பொருட் செலவு | ரூ. 2,400,000,000 |
| | | | ரூ. 2,400,000,000 |

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

† 2009, ஓகத்து மாதம் 6 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2009 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க குறைநிரப்பும் மதிப்பீட்டைப் பார்க்க. இலக்கம் 1 முதல் 9 வரையுள்ள குறைநிரப்பும் மதிப்பீடுகளின் மொத்தம் ரூபா. 16,445,510,000.

*10.

ஊழியர் சகாய நிதிய (விசேட ஏற்பாடுகள்) (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*11.

இந்தியக் குடிவரவு தொழிலாளர் (நீக்கம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*12.

சொத்துக்களால் ஆதாரப்படுத்தப்பட்ட பிணைப் பொறுப்பளித்தல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*13.

பிணைப் பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

*14.

காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தல் (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

*15.

தவணை தவறிய வரிகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*16.

இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*17.

இலங்கைப் பகிரங்கத் தொழில் முயற்சிகள் சீர்திருத்த ஆணைக்குழு (நீக்கச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*18.

குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்பு சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூன் 17, 2008) [1].

*19.

ஆளுநர்களின் ஓய்வூதிய சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*20.

மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு மற்றும் எதிரீட்டுத் தீர்வைகள் சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*21.

வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*22.

செயலூக்கமற்ற சொத்துக்கள் (மீட்புச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*23.

சூதாட்ட (விசேட ஏற்பாடு) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*24.

முற்பாதுகாப்பு வழிமுறைகள் சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*25.

குடியியல் வான்செலவு சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*26.

இலங்கை பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழு (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*27.

பல்கலைக்கழகங்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*28.

குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*29.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.1),— 06/2006 ஆம் இலக்கமும் 2006.04.25 ஆம் திகதியும் கொண்ட பொது நிர்வாக சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசர், உயர் நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர், மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் ஆகியோருக்கான மாதாந்த சம்பளங்கள் பின்வருமாறு அமைய வேண்டுமென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் கீழ் இந்தப் பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

| | |
|---|---|
| மாண்புமிகு பிரதம நீதியரசர் | ரூ.70,000.00 |
| | ரூ. 1,500.00 |
| உயர்நீதிமன்ற நீதிபதிகளும் மேன்முறையீட்டு | |
| நீதிமன்றத்தின் தலைவரும் | ரூ. 65,000.00 |
| மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் | ரூ. 63,500.00 |

மேலும், உயர்நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதிகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய சம்பளங்களாக 2004 செத்தெம்பர் மாதம் 09 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்றப்பட்ட சம்பளத்திட்டங்களுக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் சம்பளங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென இந்தப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*30.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.2),— 2008.07.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசர், உயர்நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர், மேன்முறையீடு நீதிமன்ற நீதிபதிகள் ஆகியோருக்காக, சம்பளத்தின் 25% இற்குச்சமமான மாதாந்த ஆள்சார் படியொன்றைச் செலுத்துவதற்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் கீழ் இந்தப் பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

மேலும், உயர்நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதிகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய ஆள்சார் படிகளாக பாராளுமன்றத்தினால் 1998 மாச்சு மாதம் 17 ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட படிகளுக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் ஆள்சார் படிகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளு மன்றத்தினால் மேலும் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*31.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.3),— மேலும், 2007.08.01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசரும் உயர்நீதிமன்ற நீதிபதிகளுக்கும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவருக்கும் மேன்முறையீடு நீதிமன்ற நீதிபதிகளுக்கும் கீழ்க்காணுமாறு மாதாந்த வீட்டு வாடகைப் படிகள் செலுத்தப்பட வேண்டுமென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் இப்பாராளுமன்றத்தினால் மேலும் தீர்மானிக்கப்படுகின்றது.

| | |
|---|---|
| மாண்புமிகு பிரதம நீதியரசர் | ரூ. 27,500.00 |
| உயர்நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிபதிகளின் தலைவர் | ரூ. 25,000.00 |
| மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் | ரூ. 22,500.00 |

மேலும், உயர் நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதி களுக்குச் செலுத்தப்பட வேண்டிய வீட்டு வாடகைப் படியாக 2004 செத்தெம்பர் மாதம் 09 ஆந் திகதி பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட படிக்குப் பதிலாக, இப் பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட வீட்டு வாடகைப் படி நடைமுறைப்படுத்தப் பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*32.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.4),— 2008.07.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு, பிரதம நீதியரசருக்கு உபசரணைப் படியாக மாதாந்தம் ரூ. 3,500 படியொன்றைச் செலுத்துவதற்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108 (1) ஆம் உறுப்புரையின் கீழ் இப்பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

மேலும் இதற்கு முன்னர் பிரதம நீதியரசருக்காக பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட உபசரணைப் படிக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப் படும் உபசரணைப் படி நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றத் தினால் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*33.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியினால் மதுவரி தொடர்பில் ஆக்கப்பட்டு 2008, ஏப்பிறல் மாதம் 10 ஆந் திகதிய 1544/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.06.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*34.

தபால், தொலைத்தொடர்புகள் அமைச்சர்,— அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் கீழ் விதி,— (190ஆம் அத்தியாயமான) அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் 12, 21, 25, 27, 81, 62, 06, 39, 49, 44, 68, 67, 40, 24, 59, 60, 35, 59, 67 மற்றும் 64ஆம் பிரிவுகளின் கீழ், அஞ்சல், தொலைத்தொடர்புகள் அமைச்சரால் நிதி அமைச்சரின் உடன்பாட்டுடன் ஆக்கப்பட்டு, 2007, ஏப்பிறல் மாதம் 25 ஆம் திகதிய 1494/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2007. 07. 17 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான விதி அங்கீகரிக்கப்படுமாக.

*35.

சுகாதார நலத்துறை, போசணை அமைச்சர்,— மருத்துவ கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— இலங்கை மருத்துவப் பேரவையுடனான கலந்தாலோசனையுடன் (105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் 72 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்டும் 19 ஆம் பிரிவின் கீழ் சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரால் ஆக்கப்பட்டு 2009 பெப்ரவரி மாதம் 25 ஆந் திகதிய 1590 / 13 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2009.04.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

36.

அரசியலமைப்பிற்கான பத்தொன்பதாவது திருத்தச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

37.

வடக்கு மற்றும் கிழக்கு இரு மாகாணங்களையும் தற்காலிகமாக இணைத்திருப்பதை இரத்துச் செய்வதற்கான (விசேட பிரமாணங்கள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

38..

வாரியபொல ராஜமகா விஹாரை அபிவிருத்திச் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

39.

பலாத்காரமாக மதம் மாற்றுவதைத் தடைசெய்தல் சட்டமூலம் — பரிசீலனை.

40.

செரண்டிப் கல்வி நம்பிக்கை நிறுவனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

41.

சம்மாந்துறை தப்லீகுல் இஸ்லாம் அரபுக் கல்லூரி (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

42.

பண்டாரகம விக்கிரமசீலா தர்மாயதனய சமூக சேவை மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

---

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

0066 / '09

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2008 ஆம் ஆண்டில் உள்ளவாறாக இலங்கையின் ஒவ்வொரு தேர்தல் தொகுதியிலும் அல்லது வாக்கெடுப்புப் பிரிவிலும் உள்ள பதிவுசெய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கையை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) மேலே சொல்லப்பட்ட ஒவ்வொரு தேர்தல் தொகுதியிலும் உள்ள,

(i) மொத்த சனத்தொகை,

(ii) ஆண்கள் மற்றும் பெண்களின் விகிதாசாரம்,

(iii) அவர்களின் வயதுப் பிரிவுகள்,

(iv) வாக்காளர்களின் சமய ரீதியான விகிதாசாரம், இன ரீதியான விகிதாசாரம்

ஆகியவற்றை அவர் வெவ்வேறாகக் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?